முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) இரண்டாம் தவணைப்பரீட்சை 2017 யூலை
General Certificate of Education (Ord. Level)Second Term Examination, 2017July

| மனைப்பொருளியல் Home Economics | 85 T I,II | மூன்று மணித்தியாலம் Three Hours |
|---|---|---|

**அறிவுறுத்தல்:-**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (பகுதி – I)
2. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. 1 – 40 வரையுள்ள வினாக்களுக்கு 1,2,3,4 வினா அடையாளமிடப்பட்ட விடைகளில் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.
4. 1ம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக. (பகுதி – II)

## பகுதி - I

1. குளுக்கோஸ் மூலக்கூறுகள் இரண்டின் சேர்க்கையால் உருவாவது
   1. மோல்ற்றோசு 2. சுக்ரோசு 3. இலற்றோசு 4. அமைலோசு

2. கிளைக்கோஜன் அதிகம் காணப்படும் உணவுக்கூட்டம்
   1. கொய்யா, பால் 2. மரக்கறி, பழம்
   3. ஈரல், விலங்கிழையம் 4. விளாம்பழம், இறைச்சி

3. பின்வருவன X எனும் போசணைப்பதார்த்தத்தினால் ஆற்றப்படும் சில தொழிற்பாடுகள் ஆகும்
   - சக்தியை வழங்கல்
   - நீர்ப்பீடனத்தை ஏற்படுத்தல்
   - ஓமோன் உருவாக்கத்திற்கு உதவுதல்
   - குருதி உற்பத்திக்கு இன்றியமையாதது.

   தரப்பட்ட கூற்றுக்களின்படி X எனும் போசணைக்கூறு
   1. காபோவைதரேற் 2. புரதம் 3. கொழுப்பு 4. விற்றமின் A

4. பெப்சினோஜனை பெப்சினாக மாற்ற உதவுவது
   1. ஐதரோக்குளோறிக்கமிலம் 2. புரதம் 3. இலிப்பேசு 4. திரிச்சின்

5. பின்வரும் கூற்றுக்களை அவதானித்து வினாவப்பட்ட வினாவுக்கு விடை தருக
   - "U" வடிவில் அமைந்துள்ளது
   - பித்தச்சாறு புரதச் சமிபாட்டுக்கு அவசியம்

   மேற்கூறப்பட்ட தொழிற்பாடு சமிபாட்டுத் தொகுதியின் எப்பகுதியின் செயற்பாடு ஆகும்
   1. இரைப்பை 2. சதையி 3. முன்சிறுகுடல் 4. பெருங்குடல்

6. காய்கறிகள், பழங்களில் காணப்படும் நிறப்பொருட்கள் சில தரப்பட்டுள்ளன.
   அந்தோசயனின், பிளைவோன், குளோரபில், கரோட்டின்
   இவற்றில் முள்ளங்கி, கீரை வகைகளில் காணப்படும் நிறப்பொருட்கள்
   1. பிளைவோன், குளோரபில் 2. கரோட்டின், அந்தோசயனின்
   3. அந்தோசயனின், குளோரபில் 4. கரட்டின், அந்தோசயனின்

7. அதிக போசணையைக் கொண்ட காலை வேளை உணவு பின்வருவனவற்றுள் எது
   1. பாண், பட்டர், ஜாம், பப்பாசிப்பழம்
   2. பிட்டு, பாற்சொதி, உப்புமிளகாய், மாம்பழம்
   3. அப்பம், சோயாமீற்கறி, சீனிச்சம்பல், கொய்யாப்பழம்
   4. இடியப்பம், மீன்கறி, தேங்காய்ப்பூச்சுண்டல், வாழைப்பழம்

8. வியாபாரி இலாப நோக்குடன் குறித்த ஒரு உணவுப் பொருளுக்கு குரக்கன் கலந்து விற்பனை செய்தார். குறித்த பொருள் யாது
1. மிளகு	2. தேயிலை	3. கித்துள்	4. கடுகு

9. குழந்தைகளின் சிறுநீரகத்தைப் பாதிக்கும் என்ற காரணத்தால் உணவு தயாரிக்கும் போது மட்டுப்படுத்த வேண்டிய உணவுகள்
1. பால், சீனி	2. சீனி, உப்பு	3. உப்பு, பழம்	4. பால், பழம்

10. வயோதிபப்பருவத்தில் அகத்துறிஞ்சல் குறைவடைவதால் உணவு தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயம்
1. உடனடி உணவு வழங்குதல்
2. இலகுவில் சமிபாடு அடையக்கூடிய உணவுகள் தயாரித்தல்
3. பொரித்த உணவுகளை வழங்கல்
4. நீராகாரம் மட்டும் வழங்குதல்

11. ஸ்ரூ செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வெப்பம் யாது?
1. $70^0$c- $75^0$c	2. $65^0$c – $80^0$c	3. $80^0$c – $85^0$c	4. $75^0$c -$80^0$c

12. சரியான தொழினுட்ப முறையின்மை காரணமாக அறுவடையின் போது உணவுப் பொருட்கள் வீண்விரயமாக்கப்படும் வீதம்
1. 20%	2. 15%	3. 30%	4. 40%

13. கீழே தரப்பட்ட நுண்ணங்கிகளை இனங்காண்க.
- அஸ்பஜிலஸ்
- மியுக்கோர்
- பென்சீலியம்

தரப்பட்ட நுண்ணங்கிகளின் இனம் யாது?
1. பற்றீரியா	2. பூஞ்சணம்	3. புழு	4. அந்துப்பூச்சி

14. அமுக்கத்தில் உணவைச் சமைத்தலுக்கான வெப்பநிலை
1. $100^0$ c – $110^0$ c	2. $90^0$ c – $99^0$ c	3. $110^0$ c - $120^0$ c	4. $100^0$ c

15. குழையல் மா, வைன், பியர் ஆகியவற்றின் உபயோகத்திற்கு பயன்படும் தாவர கல அங்கி
1. மதுவம்	2. பற்றீரியா	3. அப்பச்சோடா	4. பேக்கிங்பவுடர்

16. பிரதான உணவு வேளைக்கு முன் பாண் அல்லது பணிஸ் போன்றவற்றை பரிமாறும் போது பயன்படுத்த வேண்டிய உபகரணம்
1. பிரதான தட்டு, கத்தி	2. பக்கப்பீங்கான், பட்டர் கத்தி
3. முள்ளுக்கரண்டி, கத்தி	4. பாண்கத்தி, முள்ளுக்கரண்டி

17. உப்பு, கொறக்காய்ப்புளி பயன்படுத்தி தயாரிக்கும் உணவு
1. சட்ணி	2. அச்சாறு	3. மீன்புளித்தீயல்	4. மாங்காய்சட்ணி

18. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்கவும்
- சீனிக்கரைசலிலும் மதுசாரத்திலும் வளர்ச்சியடையும்
- பழச்சாறு, வினாகிரி உற்பத்தியில் தொழிற்படும்
- பழ உற்பத்தியில் நொதித்தலின் போது விரும்பத் தகாத சுவை ஏற்படும்

மேற்தரப்பட்ட கூற்றுக்களுக்கு பொருத்தமான நுண்ணங்கி
1. பற்றீரியா	2. வைரசு	3. பூஞ்சணம்	4. மதுவம்

19. கீழே தரப்பட்ட விடயங்களை அவதானிக்கவும்
A – கருக்கலைதல்
B – கால்கள் வளைதல்
C – கண்கள் உலர்தல்
D – மந்தபுத்தியுள்ள பிள்ளை பிறத்தல்
E – குழந்தை இறந்து பிறத்தல்

மேலேயுள்ளவற்றில் கர்ப்பகால அயடீன் குறைபாட்டு விளைவுகள்
1. ABC	2. CDE	3. BCD	4. ADE

20. தையல் வேலைகளின் போது விரல் பாதுகாப்பு உபகரணமாக அமைவது
1. தீதாள் 2. சுவடுவரைசில்லு 3. கையுறை 4. அளவுநாடா

21. பின்வரும் தொகுதிகளை அவதானிக்கவும்
A – தையல் பொறி
B – சுவடுவரைசில்லு
C – அளவுநாடா
D – இரேந்தை
மேலேயுள்ளவற்றில் தையலுக்கு பயன்படும் கருவிகளின் கூட்டம்
1. ABC 2. ABD 3. AB 4. BC

22. இல்லத்தளபாட அணியொன்றில் பிரான்சியப்பொருத்து, மீன்முள்ளுத்தையல் என்பன இடப்பட்டது. இதில் அடங்கும் தையல் முறைகள்
1. அடிப்படைத்தையல், அலங்காரத்தையல்
2. அலங்காரத்தையல், நுட்பத்தையல்
3. நுட்பத்தையல், அடிப்படைத்தையல்
4. நுட்பத்தையல், அலங்காரத்தையல்

23. தையல் நுட்ப முறைகளைத் தைப்பதற்கு தேவையான துணித்துண்டின் அளவு
1. 10 ×12 cm 2. 12× 12 cm 3. 10× 15 cm 4. 12× 15 cm

24. நார்களின் இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது
- மிருதுவானது, மென்மையானது
- அதிக உறிஞ்சும் தன்மையுடையது
- வெப்பத்தை தாங்கக் கூடியது

மேலுள்ள இயல்புகளை உடைய நார் எது?
1. பட்டு 2. பருத்தி 3. கம்பளி 4. லினன்

25. குழந்தைச் சட்டைக்கு உகந்த பொருத்து யாது?
1. தட்டைப் பொருத்து 2. சாதாரண பொருத்து
3. மேற்செறிப் பொருத்து 4. பிரான்சியப் பொருத்து

26. குழந்தை ஆடையொன்றை அமைக்கத் தேவையான துணியின் அளவு
1. 50 cm×50cm 2. 50 cm× 20cm 3. 52cm× 52 cm 4. 23cm × 29 cm

27. முன்பிள்ளைப்பருவ பெண்பிள்ளையின் மார்புச் சுற்றளவு யாது?
1. 80cm 2. 70cm 3. 60cm 4. 50cm

28. குளியலறைக்கான இல்லத் துணையணிகள் எவை?
1. படுக்கைவிரிப்பு, கட்டில் விரிப்பு
2. துவாய், கதிரை உறை
3. கதிரை உறை, கைத்துடைப்பம்
4. கைத்துடைப்பம், குந்துசட்டி உறை

30. குழந்தையொன்று வெளிக்காட்டிய உளவிருத்தித் திறன்கள் சில
சத்தம் கேட்கும் திசைக்குத் தலையைத் திருப்பும்
அர்த்தமற்ற சப்தமொன்றை மீண்டும் மீண்டும் ஒலிக்கும்
பா. பா. டா. டா. மா மா
இச்செயற்பாடுகள் நடைபெறும் காலப்பகுதி
1. 2-3 மாதம் 2. 7-8 மாதம் 3. 5-6 மாதம் 4. 10-12 மாதம்

31. பிணியாய் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் சில
A – நிறை அளத்தல்
B – குருதிச் செறிவுப் பரிசோதனை
C – சிறுநீர்ப் பரிசோதனை
D – சுர் காரணி அறிதல்
இவற்றுள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பரிசோதனை
1. A,B 2. C,D 3. A,C 4.B,D

32. குழந்தையின் ஆரோக்கிய நிலைக்காக 12 மாதங்கள் முடிவில் கொடுக்கப்படும் MMR வக்சின் மூலம் தடுக்கப்படும் நோய்கள்
   1. போலியோ, கசம், கூகைக்கட்டு
   2. கூகைக்கட்டு, குக்கல், ஈர்ப்புவலி
   3. சின்னமுத்து, ரூபெல்லா, கூகைக்கட்டு
   4. கூகைக்கட்டு, சின்னமுத்து, குக்கல்

33. முளையம் உட்பதித்தல் செயற்பாடு நடைபெறும் இடம்
   1. சூலகம் 2. பலோப்பியன்குளாய் 3. சூல் 4. கருப்பை

34. தெஸ்தெஸ்தெரோன் ஓமோன் சுரக்கப்படுவது
   1. கபச்சுரப்பி மூலம் 2. அதிரீனல்சுரப்பி மூலம்
   3. விதைகள் மூலம் 4. முள்ளிற்கும்சுரப்பி மூலம்

35. கீழே தரப்பட்ட பண்புகளை அவதானித்து விடை எழுதுக
   A – பகிர்வு
   B – தனித்துவம்
   C – சுயாதீனம்
   D – தியாகம்
   இவற்றுள் கூட்டுக்குடும்ப இயல்பைக் காட்டுவது.
   1. A,D 2. B,C 3. C, D 4. A, B

36. அடிப்படை வர்ணங்கள் இரண்டை சம அளவில் கலந்து பெறப்பட்ட வர்ணம்
   1. சிவப்பு 2. பச்சை 3. நீலம் 4. கறுப்பு

37. மனை அலங்காரத்தில் முதன்மைப்படுத்தும் இயல்பைக் காட்டும் வடிவமைத்தல் கோட்பாடு
   1. உறுத்தல் இசைவு 2. சந்தம் 3. சமநிலை 4. விகிதசமம்

38. பின்வரும் இயல்வுகளை அவதானிக்கவும்
   அழகு, அமைதி, நெகிழும் தன்மை, மகிழ்ச்சி
   மேற்கூறப்பட்ட தன்மைகளைக் கொண்ட ரேகை
   1. கிடைரேகை 2. சரிவுரேகை 3. நெளிரேகை 4. வளைரேகை

39. வீட்டிற்குக் கிடைக்கும் மூலதன வருமானத்தில் அடங்குபவை
   1. பொருட்கள், சேவைகள் 2. சம்பளம், வட்டி
   3. பொருட்கள், வட்டி 4. சம்பளம், சேவைகள்

40. மனை வளங்களில் பொது வசதிகளில் உள்ளடக்கப்படுவது
   1. காலம் 2. மின்சாரம் 3. பணம் 4. நூலகம்

The National e-learning Portal for The General Education

முழுப்பதிப்புரிமையுடையது[All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) இரண்டாம் தவணைப்பரீட்சை 2017 யூலை
**General Certificate of Education (Ord. Level)Second Term Examination, 2017July**

| மனைப்பொருளியல் Home Economics | 85 | T | I,II | மூன்று மணித்தியாலம் Three Hours |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்:-**

5. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. (பகுதி – I)
6. கணிப்பான்கள் பயன்படுத்த அனுமதி இல்லை.
7. 1 – 40 வரையுள்ள வினாக்களுக்கு 1,2,3,4 வினா அடையாளமிடப்பட்ட விடைகளில் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.
8. 1ம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக. (பகுதி – II)

## பகுதி – II

1. **கட்டிளமைப் பருவப் பெண்பிள்ளை, முன்பிள்ளைப்பருவ ஆண்பிள்ளை, கர்ப்பமடைந்துள்ள சிறிய தாயார், பாட்டன், பாட்டி, பிள்ளைகளின் தாய், தந்தை ஆகியோர் அடங்கிய குடும்பத்தில் தாயும் தந்தையும் தொழிலுக்கு செல்பவர்கள். பாட்டன், பாட்டி பண்ணை வளர்ப்பு, மரக்கறிச் செய்கையில் தமது பொழுதைச் செலவு செய்வார்கள். சிறிய தாயார் தையல் வேலையில் ஆர்வம் கொண்டமையால் தனது சிசுவுக்குத் தேவையான ஆடைகளைத் தாமே தயாரித்துக் கொள்ளும் கூட்டு முயற்சியுடைய குடும்பம் ஆகும்.**

1. இக்குடும்பத்தில் உள்ள விசேட போசணைத் தேவையுடைய பருவங்கள் எவை?
2. வீட்டுத் தோட்டத்திலுள்ள மரக்கறிகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் எவை?
3. குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக உணவு அருந்துவதன் பயன்கள் எவை?
4. குழந்தை ஆடையொன்றினைத் தயாரிக்கும் போது பயன்படும் அலங்காரத் தையல்கள் எவை?
5. மேலதிகமாகக் கிடைக்கும் மரக்கறிகளை வீட்டு மட்டத்தில் இலகுவாகப் பேணும் முறைகள் எவை?
6. கர்ப்பமடைதலுக்கு மிகப் பொருத்தமான வயது யாது?
7. கழிவுத் துணித்துண்டுகளைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய வீட்டுத் தளபாடத் துணையணிகள் எவை?
8. இக் குடும்பச் சூழல் மகிழ்ச்சிகரமாக அமைய ஏதுவான காரணிகள் எவை?
9. கட்டிளமைப்பருவப் பெண் பிள்ளையின் விசேட போசணைத் தேவைகள் எவை?
10. வீட்டுத் தோட்டத்தை அலங்கரிக்கும் முறைகள் எவை?

(2×10 = 20புள்ளிகள்)

2. **"ஆரோக்கிய வாழ்வுக்கு போசணையுள்ள உணவு அவசியம்"**
   1. பால், இறைச்சி, முட்டை என்பவற்றில் காணப்படும் புரத வகைகளைக் குறிப்பிடுக?
   2. உணவு வேளைகளைத் திட்டமிட ஆதாரமாக அமைபவை எவை?
   3. போசணைக் கூறுகளை வகைப்படுத்தி விளக்குக?

(3 + 3+4 = 10புள்ளிகள்)

3. **மனோரம்மியமான வாழ்க்கைச் சூழலை உருவாக்க மனைத்திட்டமிடல் அவசியம்.**
   1. வீட்டு அலங்கரிப்பில் பயன்படும் கலையின் அடிப்படை அம்சங்கள் எவை?
   2. குறுக்குக் காற்றோட்டம் என்றால் என்ன?
   3. மனைத் திட்டமிடலில் நிலத்தைத் தெரிவு செய்யு் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக?

(3 + 3+4 = 10புள்ளிகள்)

**4. உடலியற் செயற்பாடுகளுக்கு உணவுச் சமிபாடு அவசியமானது.**

1. உணவுச்சமிபாடு என்றால் என்ன?
2. பெருங்குடலின் தொழிற்பாடுகள் 3 தருக?
3. பின்வரும் அட்டவனையைப் பூர்த்தி செய்க. (A, B, C, D)

| போசணைப்பதார்த்தம் | சுரப்பு | நொதியம் | விளைபொருள் |
|---|---|---|---|
| மாப்பொருள் | A | உமிழ்நீர் அமிலேசு | B |
| புரதம் | சதையச்சாறு | C | D |

(3 + 3+4 = 10 புள்ளிகள்)

**5. உணவைப் பேணிப் பாதுகாக்க நற்காப்பு முறைகள் கையாளப்படும்.**

1. உணவு நற்காப்பு செய்வதன் நன்மைகள் 3 தருக?
2. மீன்புளித்தீயல் செய்வதில் கொறக்காய்ப்புளி சேர்ப்பதன் அடிப்படைக் கோட்பாடு யாது?
3. எலுமிச்சை ஊறுகாய் தயாரிக்கும் படிமுறைகளைக் குறிப்பிடுக

(3 + 3+4 = 10 புள்ளிகள்)

**6. தரமான முறையில் ஆடைகள் நிர்மானிக்கப்படல் சிறந்தது.**

1. துணையணிகளை நிர்மாணிக்கும் போது தலையணை உறைக்கான திறப்புக்களை மூடும் முறைகள் மூன்று தருக?
2. தையல் வகைகளில் நுட்பத்தையல் முறைகள் மூன்று தருக?
3. மாதிரிஉரு வரைவதற்குத் தேவையான (கணிப்பிடப்பட்ட) முன், பின்பக்க, மார்புச்சுற்றளவு, இடைச்சுற்றளவு என்பவற்றை குறிப்பிடுக?

(3 + 3+4 = 10 புள்ளிகள்)

**7. ஆரோக்கியமான மகப்பேற்றுக்கு உரிய வழிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.**

1. பிணியாய் நிலையத்தில் கர்ப்பிணித் தாய்க்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் பரிசோதனைகள் மூன்று குறிப்பிடுக.
2. முற்பிரசவ விருத்திக் கட்டங்கள் எத்தனை வகை? அவை எவை?
3. இனப் பெருக்கத் தொகுதியின் பின்வரும் பகுதிகளின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக?
   - A. பலோப்பியன் குழாய்
   - B. கருப்பை
   - C. சூலகம்
   - D. விதைப்பை

(3 + 3+4 = 10 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education